VISIT…

உறக்கம் தொலைத்த இரவுகளில்

கார்த்திக் பிரபு

11.பேருந்தில் பயணிக்கும் சமயங்களில்

எழும் அடுத்த கவிதை பற்றிய யோசனைகளை

முன்னிருக்கையில் முதுகு காட்டி

அமர்ந்திருக்கும் ஒரு அம்மாவின் தோளில்

சாய்ந்த படி எனை பார்த்து சிரிக்கும்

குழந்தையின் சிரிப்போ..

அமர இடமில்லாமல் நின்ற படியே

தலைக்கு குளித்த ஈரக் கூந்தலை

அள்ளி முடியும் இளம்பெண்ணின் வனப்போ..

மூக்குரசும் நெருக்கத்தில் அமர்ந்து காதல்

பேசும் ஜோடிகளின் கிசுகிசுப்போ

கலைத்து விடும் எப்போதும்..!

12.என் அக்காவுடன் முதன் முதலில்

என் வீட்டிற்க்கு வந்தாய் நீ

எல்லா அறைகளும் சுற்றிப் பார்த்து விட்டு

கடைசி அறைக்கு வந்தாய் ..

அங்கே அலமாரியில் இருந்த ஒரு சிறுமியின்

புகைபடத்தை உனக்குக் காட்டி

`இவள் தான் என் அத்தை மகள் `என்றேன்.

அப்போது எந்த வித உணர்ச்சியும் வெளிபடுத்தாமல்

அரை சிரிப்பு மட்டும் சிரித்து வைத்தாய்...

அடுத்த நாள் பள்ளியில் என்னை வேதியியல் அறைக்கு

வருமாறு சைகை காட்டி சென்றாய்..

அங்கு என்னிடம் அந்த அத்தை பெண்ணைப் பற்றி

ஏதும் கேட்பாய் என ஆவலுடன் வந்தேன்

ஆனால் நீயோ ஒரு புகைப்படத்தை கைப்பையிலிருந்து

எடுத்து இவன் தான் என் அத்தைப் பையன் என்று

பதிலடி கொடுத்தாயே நினைவிருக்கிறதா..?

உறக்கம் தொலைத்த இரவுகளில்

கார்த்திக் பிரபு

9.அந்த ஆரம்ப நாட்களில்
உன்னிடம் தொலைப்பேசியில்
நிறைய கதைத்திருக்கிறேன்..
நம் காதலை மோப்பம்
பிடித்து விட்ட கணித ஆசிரியை
என்னை பற்றி உன் வகுப்பில்
பெருமையாக பேசும் தமிழாசிரியர்
என எல்லாக் கதைகளும் பேசி விட்டு
தொலைபேசியை வைக்கும் சமயத்தில்
சரி நான் வைக்கிறேன் பார்க்கலாம் என்பாய்..
நான் உடனே எப்போ பார்க்கலாம் என்பேன்.
கூடிசீக்கிரம் என்பாய்...
இதே கேள்வியை நான் கேட்பேன்
என உனக்கும் அதே பதிலைத் தான்
நீயும் சொல்வாய் என எனக்கும் தெரியும்..
ஆனாலும் அந்தக் கேள்வியும் பதிலும் இல்லாமல்
முடிந்ததில்லை நம் கதையாடல்..!

10. நீ தாவணி அணிந்தால் எனக்கு பிடிக்காது
அது உனக்கும் தெரியும்.
ஆனால் அன்று டியூசனுக்கு வேண்டுமென்றே
தாவணி அணிந்து வந்திருந்தாய்.
உனைக் கண்டு கொள்ளாமலேயே இருந்த
என் கவனம் கவர அடிக்கடி எனைக்கடந்து சென்றாய்
உனை நான் பார்க்கும் போதெல்லாம்
இதழ்களை ஈர்ப்படுத்தியவாறே கண்சிமிட்டினாய்
நான் பார்க்க மறுத்தால்
எனைக்கூப்பிட்டு பளிப்புக் காட்டுவாய்
அட கண்டுக் கொள்ளாமலிருந்தால்
ரசிக்கும் படியாய் இவ்வளவு சேஷ்டை பண்ணுவாளா
இவளென மனதிற்க்குள் நினைத்துக் கொண்டேன்
டியூசன் முடிந்த அந்த நேரத்தில்
என்னை கடந்து நீ போன போது
உன்னிடம் நான்
`நீ தாவணி அணிந்தால் எனக்கு பிடிக்காது`
என்றேன் மீண்டும்...!

உறக்கம் தொலைத்த இரவுகளில்

கார்த்திக் பிரபு

7.

தூரத்தில் என்னை பார்த்த உடனே

நீ தலைகுனிந்து நடக்க ஆரம்பிப்பாய்

நான் உனை கடந்து செல்லும்

அந்த ஒரு விநாடியில் சட்டென தலை நிமிர்ந்து

எனை பார்ப்பாய்

அந்த இடைவெளியும் உஷ்ணமும் நொடியும்

நம் இருவரின் டைரியிலும் அன்றையத் தினத்திற்க்கான

பக்கத்தில் நிரப்பப் பட்டிருக்கும்.

8.

அசிங்கமாய் முடிவெட்டிக் கொண்ட நாட்களிளும்

இஸ்திரி பண்ணாத சட்டை அணியும் நாட்களிளும்

வகுப்பின் முதல் வரிசையில் அமராமல்

ஏதாவதொரு மூலையில் அமர்ந்திருப்பேன்

எனைக் கண்களால் தேடித் தேடி

நீ சளைக்கும் அழகைநான் ஒளிந்திருந்து ரசிப்பேன்....

கடைசியாக எனை நீ கண்டு பிடிக்கும்

அந்த நொடியில் மலரும் உன் முகம்

அந்த நொடிக்கு முந்தைய நொடிவரையிலுமிருந்த

என் நினைவுகளை ஒரேடியாக மறக்கச் செய்யும்.....

உறக்கம் தொலைத்த இரவுகளில்

karthick

நினைவிருக்கிறதா.....?

5.` உன் பிறந்த நாளுக்கு என்ன பரிசு வேண்டும்

என்று உன்னிடம் நான் கேட்ட போது

`என்ன பரிசாகயிருந்தாலும் அது உன்னுடயதாக

நாளை உலகத்தில் பிறந்ததாக இருக்க வேண்டும்` என்றாய்.

நீ பரிசாய் கேட்டது என் கவிதைகளை

தான் என்பதை புரியாமல்

அன்றிரவு முழுவதும் யோசித்து விட்டு

ஒன்றும் தோனாமல் மறுநாள் உன்னிடம் சொன்னேன்

அதற்கு நீ எனக்காக யோசித்து தூங்காமல்

சிவந்த விழிகளும் வாடிய இந்த முகமும் தான்

என் பிறந்த நாள் பரிசென்று என் முகத்தை உன் கைகளில் தாங்கி

இரண்டு கண்களுக்கும் முத்தமிட்டாயே

6.`நம் காதல் விஷயம் பள்ளியில் பரவ

ஆரம்பித்த சில நாட்களில் பள்ளியின் ஆண்டுவிழா வந்தது..`

கலைநிகழ்ச்சியில் அடுத்ததாக

தனி நடனம் -பரதநாட்டியம்`

என்று உன் பெயரை அறிவித்த உடனே

பள்ளி மாணவர்கள மட்டுமின்றி

ஆசிரியர்களும் என்னை திரும்பி பார்த்தார்களே நினைவிருக்கிறதா.....?`

உறக்கம் தொலைத்த இரவுகளில்

karthick

3. `ஆண்டு விழாவில் ஆடிய உன் நடனப் புகைபடங்களை

ஆசிரியர் அறையில் இருந்து எடுக்க(திருட) முயன்று

வசமாக சிக்கிக் கொண்ட என்னை ஒரு வாரம்

வகுப்பிலிருந்து தள்ளி வைத்திருந்தார்கள்..

அந்த நாள் இரவு தொலைபேசியில் எனை அழைத்து..

`ஆசிரியர் அறையிலிருந்து என் புகப்படங்களை

எடுக்க தைரியம் இருக்கிறது....

நீ என்னை காதலிக்கிறேன் என்று சொல்ல தைரியம்மில்லையா.!!!என்று

செல்லமாக எனை கடிந்து கொண்டாயேநினைவிக்கிறதா.....???`

4. ` பார்வை பறிமாற்றங்கள் மட்டுமே நிகழ்ந்து கொண்டிருந்த

அந்த ஆரம்ப நாட்களில்..

என்னுடைய இன்னொரு நண்பனும் உனை காதலிக்கிறான்

ன்பதை அறிந்து நான் ஒதுங்கி கொள்கிறேன் என அவனிடம் கூறியதை

உன் தோழி மூலம் தெரிந்து கொண்ட நீ

நேராக என்னிடம் வந்து என் சட்டயை பிடித்து

`நம் காதலை விட்டுக் கொடுக்க நீ யாரடா ....ராஸ்கல்`

என்று ஒரு உலுக்கு உலுக்கி விட்டுப் போனாயே.

நினைவிருக்கிறதா.....?`

----------தொடரும்

உறக்கம் தொலைத்த இரவுகளில்

karthick

ஆர்குட்டில்(Orkut) நான் காதல் கவிதை ,தமிழ் கவிதை கம்யூனிட்டிகளில்(communities) எழுதிக் கொண்டிருக்கும் `உறக்கம் தொலைத்த இரவுகளில்` எனும் உரையாடல் கவிதைத் தொடரை இங்கே உங்களுக்காக வழங்குகிறேன்...படியுங்கள்..படித்து விட்டு சொல்லுங்கள்..நன்றி

1.

` அன்றொரு நாள் தேர்வு அறையில்

நான் உன்னை பார்த்துக் கொண்டே எழுதியதை

நான் உன்னை பார்த்து தான் எழுதுகிறேன் என்று

தவறாய் புரிந்து கொண்ட ஆசிரியர்

தேர்வறையை விட்டு என்னை வெளியேற்றினாரே

நினைவிருக்கிறதா.....?`

2.

நம் பள்ளி வேதியியல்

ஆய்வுக்கூடத்தில் வைத்து உன்

பிறந்த நாள் பரிசை கொடுத்து விட்டு

யாருமே பார்க்க வில்லை என்று நிம்மதியாக

ஒரு வாயில் வழியாக நீயும்

மறு வாயில் வழியாக நானும் வந்து கொண்டிருந்ததை

ஆய்வுக் கூடத்திற்கு எதிர்ப்புறம் இருந்த வகுப்பறைகளின் மாடியிலிருந்து எல்லா மாணவர்களும் வரிசையாக நின்று

பார்த்துக் கொண்டிருந்தார்களே

நினைவிருக்கிறதா.....?

----------தொடரும்

தமிழ்மணம்

தமிழ்மணம் வலைப்பதிவு மென்னிதழ் சேவையைப் பயன்படுத்தும் உங்களை வரவேற்கிறோம்.

இந்த மென்னிதழ் (soft-copy) வலைப்பதிவுகளை இணையப் பக்கத்துக்கு வெளியே வாசிப்பதை ஏதுவாக்கும் நோக்கில் அளிக்கப்படுகிறது. இதைப் பயன்படுத்துவோர் பின்வரும் விதிமுறைகளுக்கு உட்பட்டே இதைப் பயன்படுத்தவேண்டும்

1. இது தனியாள் ஒருவரின் சொந்த உபயோகத்திற்கு மட்டும் அளிக்கப்படுகிறது. வணிகரீதியான உபயோகம் தடை செய்யப்படுகிறது.
2. இந்த மென்னிதழின் உள்ளடக்கம் இணையத்தில் தமிழ்வலைப்பதிவுகளிலிருந்து திரட்டிமூலம் சேகரிக்கப்பட்டது. அதன் முழு பதிப்புரிமையும் அந்த வலைப்பதிவின் உரிமையாளருக்கே சொந்தம்.
3. இந்த மென்னிதழை வாசிப்பதால் வரக்கூடிய எந்த சட்டபூர்வமான/தார்மீக ரீதியான பிரச்னைகளுக்கும் தமிழ்மணம்.காம் எந்த விதத்திலும் பொறுப்பேற்காது.

1000க்கும் மேற்பட்ட வலைப்பதிவுகளில் எழுதப்படும் பல்சுவை, பல்துறை விஷயங்களை அறிந்துகொள்ள தமிழ்மணம்.காம் தளத்துக்கு வாருங்கள்

தேனீ எழுத்துரு அளித்த உமருக்கு நன்றி.
பிடிஎஃப் தயாரிக்கும் நிரல் உதவி: www.fpdf.org